**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.43/2015**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோவிந்தன் | மதம் | : இந்து |
| த/பெ | : முருகன் | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : மணவூர் |
| தொழில் | : ரயில்வே ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**12.02.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு தாக்கல் செய்த ஜெயசீலி என் மனைவி என்றால் சரிதான். என் மனைவி முதன்முதலில் வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கை தடை உத்தரவு மட்டும்கோரிதான் தாக்கல் செய்திருந்தார் என்றால் என் இடத்தில் தள்ளி வீடு கட்டிவிட்டார் என்று தாக்கல் செய்திருந்தார். வழக்கு விவரங்களை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். ஏற்கனவே அங்கு கூரை வீடு கட்டிவிட்டதாக சொல்லியுள்ளார். ஆனால் அவர் அங்கு வீடு கட்டவில்லை.

2. நான் ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியர் என்றால் சரிதான். தாவா சொத்து புல எண் என்ன என்றால் புல எண்.84/22 ஆகும். புல எண்.84/22 ஆனது வருவாய் ஆவணங்களில் என்னவாக உள்ளது என்றால் கிராம நத்தமாக உள்ளது. புல எண்.84/22 கிராம நத்தமாக உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ஆனால் கிராம நிர்வாக அதிகாரி அது கிராம நத்தம் என்றுதான் சொன்னார். நீதிமன்றத்திலும் கிராம நத்தம் என்றுதான் உறுத்துக்கட்டளை

கொடுக்கப்பட்டுள்ளது.

3. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர், நில அளவையருடன் அளந்து பார்வையிடவில்லை என்றால் இல்லை. என் வழக்கறிஞரை வைத்து நான் அளந்தேன். முதன்முதலில் நீதிமன்ற ஆணையரும் நான் சொன்ன இடத்தைதான் அளந்தார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையரும் வழக்கு சொத்தின் புல எண்ணை நிர்ணயம் செய்யாமல் நான் சொன்னதை வைத்து மட்டும்தான் அளந்தார் என்றால் பட்டாவை பார்த்துதான் அளந்தார். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையை வைத்து வீட்டின் நான்கு எல்லை மற்றும் அளவுகளை திருத்தினோம் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் வரும்போது பிரதிவாதி கடக்கால் போட்டிருந்தார் என்றால் ஆமாம்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)